பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 20] சென்னை : ஆடி 7 (22—7—72) சனி வெளியூர் : ஆடி 8 (23—7—72) ஞாயிறு [இதழ் : 33

விண்வெளியில் இரஷ்ய செயற்கைக் கோள்கள்

மாஸ்கோ, ஜூலை 22—

இரஷ்யா நேற்று 8 செயற்கைக் கோள்களை ஒரே ராக்கெட்டின் மூலம் விண்வெளியில் சுற்றவிட்டிருக்கிறது. இவைகளில் விஞ்ஞான சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் இவைகளில் தொடர்ந்து விண்வெளி ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

செயற்கைக்கோள்களில் உள்ள எல்லா சாதனங்களும் சரியாக வேலை செய்கின்றனவாம்.

இரத்த முத்திரை குத்திக்கொண்டவர்கள் நமக்குக் 'கொலைகாரர்' பட்டம் வழங்கும் விந்தை --

தி. மு. க. மீது தீயைக் கக்கும் தீர்மானங்கள் -- திறமையாக வழக்கு ஜோடித்திருக்கின்றனர் --

நீதிக்குமுன் நிற்கிறதோ இல்லையோ -- நிமிர்ந்து நின்று பொய் கூறியிருக்கின்றனர்

இந்திராவை இந்தியாவின் ஏகச் சக்கரவர்த்தினியாக ஆக்க

ஆழ்வாராதிகளின் முயற்சி

நன்றிக்குப் பொருள் புரியாதவர்கள்

நன்ருக வாழட்டும்

'வெளி வேடக்காரனே -- முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்து எறி; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க உனக்கு நன்ருகக் கண் தெரியும்."

—லூக்காவின் சுவிசேஷம்

'நன்றி மறப்பது நன்றன்று' என்று சொன்ன திருவள்ளுவர் செத்துத் தொலையட்டும்

சென்னை, ஜூலை 22—

ஓர் ஆட்சியைக் கவிழ்க்க என்னென்ன குற்றங்கள் சாட்டப்பட வேண்டுமோ அந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் தி. மு. க. ஆட்சிமீது சுமத்தி -- அழகாக வழக்கு ஜோடிக்க முனைந்திருக்கும் இந்திரா காங்கிரசார், இந்திரா காந்தியை இந்தியாவின் ஏகச் சக்கரவர்த்தினியாக்கிடத் துடிக்கிருர்கள், இதற்கு சி. சுப்பிரமணியம் -- மோகன் குமாரமங்கலம் ஆகியோர் சூத்திரதாரியாக இயங்கி வருகின்றனர்.

நன்றி கெட்ட அவர்களுடைய மன நிலையையும் -- செயல் முறைகளையும் படம் பிடித்துக் காட்டுவதுபோல் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'வழக்கு ஜோடனை' என்ற தலைப்பில், கழகத் தோழர்களின் கவனத்துக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்; அது வருமாறு :—

உடன்பிறப்பே! ஜூலை 19-ஆம் நாளன்று சென்னையில் இந்திரா காங்கிரசார் செயற்குழுக் கூட்டத்தை நடத்தினுர்கள். அதில் ஒரிரு தீர்மானங்களையும் நிறைவேற்றி அவைகளை ஏடுகளில் வெளியிட்டிருக்கிருர்கள்.

சென்ற ஜூன் திங்கள் 14-ஆம் நாள் அவர்கள் செயற்குழு கூடியது; விவசாயிகளின் கோரிக்கைகளை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியது; அப்போது மத்திய அமைச்சர்கள் இருவர் அந்தச் செயற்குழுவுக்கு வந்திருந்தனர்.

'மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் -- விவசாய வருமான வரி கூடாது' என்பது போன்ற கருத்து அடங்கிய தீர்மானங்கள் நிறைவேறியபோது, மத்திய அமைச்சர்கள் இருவரும் ஒதுங்கிக் கொண்டார்கள்; அந்தத் தீர்மான வாசகங்களும் ஏடுகளில் வந்தன.

அதற்கிடையே, விவசாயத் துறையில் மேலும் சுமார் பதினறு கோடி ரூபாய்க்கு வரிகள் போட வேண்டுமென்றும், நிலத் தீர்வை ரத்து செய்திருப்பதை மீண்டும் விதிக்க வேண்டுமென்றும், மின் கட்டணம் செலுத்துவோர் மீது மேலும் ஏழு கோடி ரூபாய்க்கு வரி விதிக்க வேண்டுமென்றும் தமிழக அரசுக்கு மத்திய அரசு எழுதியது.

ஜூன் 3-ஆம் நாள் – அதாவது விவசாயப் போராட்டம் தொடங்கி இரண்டு மூன்று வாரங்களில் -- என் பிறந்த நாளைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டுமென்று இந்திரா காங்கிரசு எம்.எல்.ஏ. ஒருவர் கோவையில் முழங்கினர்; அதன்படி கொண்டாடிக் களித்தனர்; அது கேட்டு நானும், 'எப்படியோ ஒரு வகையில் கொண்டாடினர்களே' என்று மகிழ்ந்தேன்.

அந்தக் கட்சியின் கோபுரத்துக் கலசம், 'விவசாயிகளின் கோரிக்கைகளில் எங்களுக்கு அனுதாபம் இல்லை' என்று தெரிவித்தது; ஆனல் கோபுரத்துப் பொம்மைகளோ, அதற்கு முன்பும் ஆரம்பத்திலும் சரி -- அதற்குப் பிறகும் சரி -- அந்தக் கோரிக்கைகளுக்காக மறியல் செய்தன -- போராடித் தீர்த்தன!

இப்போது ஜூலை 19-ஆம் நாளன்று மத்திய அரசிலுள்ள மூன்று அமைச்சர்களின் முன்னிலையில் செயற்குழு—அதில் தீர்மானங்கள்; — தீர்மான வாசகங்கள், தி. மு. கழகத்தின் மீது தீயைக் கக்குவதாக அமைக்கப்பட்டுள்ளன :—

தி.மு.க.-வினர் தங்கள் வசம் உள்ள போலீசையும் -- மற்ற அரசு இயந்திரங்களையும் கட்சியை வளர்த்துக் கொள்ளவும், மாற்றுக் கட்சிகளை அழிக்கவும் ஈடுபடுத்துகின்றனர்!

கத்தி—தடி—சைக்கிள் செயின்—நாட்டு வெடிகள் ஆகியவைகளோடு நடமாடுகின்றனர்!

கழகத்துக்காரர்களைப் படைகளாக ஏவிவிட்டு, மாற்றுக் கட்சியினரையும் -- பொதுமக்களையும் தாக்கித் தன்புறுத்தி அராஜகம் நடத்துகின்றனர்!

காலித்தனம் புரிகின்றனர்!

காலிகளோடு போலீசார் இணைந்து நின்று செயல்படுகின்றனர்!

கொலை -- கொள்ளைகளை நடத்துகிருர்கள்!

'தமிழர் படை' என்ற பெயரிலும் 'சேரணி' என்ற பெயரிலும் கழகத்தினர் நடத்திய வெறியாட்டத்தில், பெண்களும் -- குழந்தைகளும் கூடத் தப்ப முடியவில்லை!

கடும் எதேச்சாதிகாரம் -- கழகத்தின் கொடுமையான அடக்குமுறை!

இவ்வளவு அந்தத் தீர்மானத்தில் உள்ளடங்கிய வாசகங்கள்! வழக்கறிஞர்கள் அல்லவா மத்திய அமைச்சர்கள் -- அதனல் திறமையாக வழக்கு ஜோடித்திருக்கிருர்கள்! நீதிக்குமுன் நிற்கிறதோ இல்லையோ—நன்ருக நிமிர்ந்து நின்று பொய் சொல்லியிருக்கிருர்கள்.

ஒரு மாநிலத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஏதாவது காரணங்கள் சொல்லித் தீரவேண்டும்.

ஆளுங் கட்சியில் பிளவு ஏற்படுத்தினல் அது சுலபமாக நடந்துவிடும்; அந்த முயற்சியும் நடத்தினுர்கள் -- நமமிடமா பலிக்கும்; அதில் தோல்வி கண்டவர்கள், இப்போது வழக்கு ஜோடிக்கத் தொடங்கியிருக்கிருர்கள்.

திருவாளர்கள் மோகனும் -- சுப்பிரமணியனும் இணைந்து நின்று நமக்கு எவ்வளவு பட்டங்களை வழங்கியிருக்கிருர்கள் பார்த்தாயா?

காலிகளாம் -- கூலிகளாம்!

இந்தக் காலிகளின் தயவு புதுவைக்கும், கிருஷ்ணகிரிக்கும் தேவைப்பட்டது; அப்போது,

(4-ம் பக்கம் பார்க்க)

கழகச் செயலாளர் படுகொலை

சீர்காழி அருகே நடந்த வெறிச் செயல்

சீர்காழி, ஜூலை 22—

சீர்காழி வட்டத்தைச் சேர்ந்த புதுத்துறை என்ற கிராமத்தில், திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரான கிருஷ்ணமூர்த்தி கொலை செய்யப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது; பெருமாள் என்பவர் கிருஷ்ணமூர்த்தியைக் கொலை செய்திருக்கிருர்.

இந்தப் படுகொலை குறித்துக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு அவ்வூர் கழகத் தோழர்கள் தந்தி மூலம் செய்தி தெரிவித்திருப்பதுடன், 'கொலையுண்ட கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்துக்குப் பாதுகாப்பு வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மற்ருெரு கழகத் தோழர் படுகொலை

குளத்துக்குள்ளிருந்து சவம் கண்டுபிடிப்பு

திருச்சி, ஜூலை 22—

தஞ்சை மாவட்டம் கீரமங்கலத்தையடுத்த பனங்குளம் என்ற கிராமத்தில், தி.மு.க. தோழர் இறையருள் என்பவர் கொலை செய்யப்பட்டு -- கோணிப் பைக்குள் அவரது உடல் மூட்டையாகக் குளத்திற்குள் அமுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாற்பது வயதேயுள்ள தோழர் இறையருள், இரண்டு நாட்களுக்குமுன் வேட்டையாடச் சென்ருராம்; இரண்டு நாளாக வீடு திரும்பாததால், அவரது வீட்டார் சந்தேகப்பட்டுப் போலீசில் புகார் செய்தனர்; போலீசார் தீவிரப் புலன் விசாரணை செய்த பின்னர், ஊருக்கு வெளியே உள்ள ஒரு குளத்தில், இறையருளின் உடல் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர்.

இக்கொலை தொடர்பாக மாணிக்கவாசகம், செல்லப்பன் என்ற இரு நபர்களைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்திரா காங்கிரசு ஆளும் மேற்கு வங்கத்தில்....

கொலை--களவு--கொள்ளை பெருக்கம்

நடப்பு ஆண்டில் மட்டும் 2,213 பேர் கொலை

கல்கத்தா, ஜூலை 22—

"கடந்த ஐந்தாண்டுகளில் மேற்கு வங்காளத்தில் 5,700-க்கும் மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்!!

என்று மேற்கு வங்க முதலமைச்சர் சித்தார்த்த சங்கர் ரே, சட்டமன்றத்தில் தெரிவித்தார்; இது தொடர்பில் அவர் விளக்கிக் கூறியதாவது :—

"1967 சனவரி முதற்கொண்டு 1972 மேவரையில், மேற்கு வங்கத்தில் 5,700-க்கும் மேற்பட்ட நபர்கள் கொலை செய்யப்பட்டனர்; 1972-ஆம் ஆண்டில் மட்டும் 3,213 பேர் கொலையுண்டனர்.

"கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 5,956 கொள்ளை வழக்குகள் -- 4,664 திருட்டு வழக்குகள் -- 57,805 கலவர வழக்குகள் நடைபெற்றிருக்கின்றன."

மணலி ஆலையில் தீ விபத்து--- 1,500 டன் எண்ணெய் சேதம்

சென்னை, ஜூலை 22—

நேற்று மணலி எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினல் பல இலட்ச ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

கழகத்தின் குரல் கல்கத்தாவிலிருந்தும் எதிரொலிக்கிறது!

மாநில சுயாட்சிக் கோரிக்கை—'அமிர்த பஜார்' ஏடு கருத்தறிவிப்பு

கல்கத்தா, ஜூலை 22—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சிக் கோரிக்கைக் குரலுக்கு நாலாபக்கங்களிலிருந்தும் ஆதரவு பெருகிவருகிறது.

மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாச நாராயணன், ஒரு கட்சிச் சார்பற்ற மாநாட்டைக் கூட்ட முனைந்திருக்கும் இந்த நேரத்தில், கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'அமிர்த பஜார் பத்திரிகா' என்ற புகழ் பெறும் ஆங்கில நாளிதழ், மாநில சுயாட்சிக்கு ஆதரவாகக் கருத்தறிவித்துள்ளது; அதன் தமிழாக்கம் வருமாறு :—

"எதுபோன்ற மாநில சுயாட்சி முறை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உடன்பாடானதாக இருக்கும் என்பதை இராசமன்னார் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளினின்று புரிந்துகொள்ளலாம்.

மத்திய அரசிடம் குவித்து வைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பலவற்றை மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளித்து—மாநிலங்களின் அதிகாரவரம்பை இப்போதிருப்பதைவிட விரிவானதாகச் செய்வதுதான் 'மாநில சுயாட்சி' என்று மேல்நோக்காகக் கூறப்பட்டு வருகின்றனவே தவிர, அரசியல் மட்டத்திலும்—சட்ட வல்லுநர்களாலும் பரிசீலித்து முடிவு எடுக்கப்படத்தக்க வகையில், 'மாநில சுயாட்சி' என்பது வரையறுக்கப்படவில்லை.

அண்மையில் சென்னையில் முன்னாள் தலைமை நீதிமன்ற நீதிபதியும்-தற்போதைய சட்ட ஆணைக் குழுத் தலைவருமான கஜேந்திர கட்கார் பத்திரிகையாளர் குழுக் கூட்டத்தில் பேசுகையில், 'மாநில சுயாட்சி என்றால் இன்னின்ன அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வேண்டும் என்பதைத் தெளிவாக்கப்பட வேண்டும்' என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கூட்டாட்சி முறை அரசியல் சாசனம் மிகச் சிக்கலான அமைப்பைக் கொண்டதாகும்.

பாதுகாப்பு—அயல் உறவு—தகவல் தொடர்பு போன்ற குறிப்பிட்ட சில துறைகள் மட்டும் மத்திய அரசைச் சார்ந்திருக்கத் தக்க வகையில் அதில் மாற்றம் செய்யலாம்; அல்லது சாசனத்தை உருவாக்கியவர்கள் விருப்பியவண்ணமே விரிவான அதிகாரங்களை மத்திய அரசிடம் விட்டுவைக்கலாம்; இரண்டுக்குமே இடமளிக்கத்தக்க வகையில்தான் கூட்டாட்சி முறைக்கான அரசியல்சாசனம் அமைந்துள்ளது.

ஒரேமாதிரியான சட்ட திட்டங்கள் எல்லா நாடுகளுக்கும்—எல்லாக் காலத்துக்கும் பொருந்துவனவாக இருப்பது கிடையாது.

மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வேண்டுமென்று கருதினால், அதற்காக அரசியல் சாசனத்தின் அமைப்பைத் திருத்தத் தேவையில்லை; ஆரோக்கியமான கூட்டாட்சி மரபுகளை உருவாக்கி அவற்றைப் பின்பற்றுவதன் மூலம் இப்போதைய சாசன வரம்புகளுக்கு உட்பட்டே மாநிலங்களின் இந்தத்தேவையை நிறைவு செய்துவிட முடியும்; இதைத்தான் கஜேந்திர கட்காரும் பரிந்துரைத்திருக்கிறார்.

நாட்டின் ஒற்றுமைக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல்—அதே நேரத்தில் நாட்டு மக்களுக்கு மேலும் மேலும் பணியாற்றுவதில் ஈடுபடும் மாநிலங்களின் தேவையை நிறைவு செய்ய இதுவே சிறந்த முறையாக இருக்கக்கூடும்."

மத்தியப் பள்ளியில் 'சமுதாய இயல்'

புதுடில்லி, ஜூலை 22—

மத்திய பள்ளிகளில் சமுதாய இயல் ஒரு விருப்பப் பாடமாக ஆக்குவதென மத்திய பள்ளிகளின் நிர்வாகக்குழு தீர்மானித்துள்ளது.

அண்மையில் இந்த நிர்வாகக் குழுவின் கூட்டம் பி.டி. சுக்லாவின் தலைமையில் நடைபெற்றது; இக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய பள்ளிகளின் நிர்வாகக் குழுவைச் சேர்ந்த இணைப் பள்ளிகளில், கற்பிக்கும் முறையில் தரத்தை உயர்த்துவதற்கென செயல் முறைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள மேலும் எட்டுப் பள்ளிகளைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளுவதற்கும் மத்தியப் பள்ளிகளின் நிர்வாகக் குழு அனுமதி அளித்துள்ளது; தமிழ் நாட்டில் கோவையில் உள்ள நேரு வித்யாலயாவும் இதில் ஒன்றாகும்.

மொரீஷியஸ் நாட்டு அரசாங்கம் கேட்டுக்கொண்டதன்மீது அந்நாட்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இந்தி மற்றும் இந்திய மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தேர்வு நடத்த மத்திய பள்ளிகள் நிர்வாகக் குழு ஒத்துக் கொண்டுள்ளதாம்.

ரூ. 10 கோடியில் வீடு கட்டும் திட்டம்

கிராமப் பகுதிகளுக்காகத் தமிழக அரசு உருவாக்கும்

மத்திய அரசிடம் ரூ. 8 கோடி கோரிக்கை

திருச்சி, ஜூலை 20—

"தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கான ரூ. 10 கோடி திட்டம் ஒன்றை தமிழக அரசு பரிசீலித்து வருகிறது; இந்தப் பெரிய திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசிடம் தமிழக அரசு ரூ 8 கோடி கேட்டிருக்கிறது"

என்று வீட்டு வசதித்துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"இந்தத் திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் 5 000 கிராமங்களில் 50 000 வீடுகள் கட்டப்படும்; ஒரு வீடு கட்ட ரூ. 2,500 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மதுரை, திருச்சி, கோவை போன்ற முக்கியமான நகரங்களில் சேரி ஒழிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

குடிசை மாற்று வாரியம் சென்னை நகரில் நல்ல பணி புரிந்துவருகிறது.

சேரி ஒழிப்பு மேம்பாட்டு வேலைகளை எட்டு இலட்சத்துக்குமேல் மக்கட்தொகையுள்ள நகரங்களில்தான் முதலில் மேற்கொள்ள வேண்டுமென இப்போது மத்திய அரசு கூறுகிறது; தமிழ்நாட்டில் 8 இலட்சத்துக்கு மேல் மக்கட்தொகையுள்ள நகரம் சென்னை ஒன்றுதான்; எனவே மூன்று இலட்சமும் அதற்கு அதிகமாகவும் மக்கட்தொகையுள்ள நகரங்களை இத்திட்டத்தின் கீழ் சேர்க்க வேண்டும் என்றும் அம்மாதிரி சேர்த்து அந்நகரங்களில் இப்பணிகளை மேற்கொள்ள உதவியளிக்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு யோசனை சொல்லியிருக்கிறேன்.

இராமேசுவரத்தில் பயணிகள் விடுதி

இராமேசுவரத்தில் ரூ. 6 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகள் விடுதி ஒன்று கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது மத்திய திட்டத்தின் கீழ் இவ்விடுதியைக் கட்டுமாறு மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் கரண் சிங்கிடம் கேட்டுக்கொண்டேன்; இத்திட்டத்தை மேற்கொள்வதாக அவர் உறுதியளித்துள்ளார்.

சேலத்துக்கு அருகிலுள்ள ஏற்காட்டில் கட்டப்பட்டுவரும் சுற்றுலாப் பயணிகள் விடுதி விரைவில் கட்டி முடிக்கப்பட்டு ஒரு மாதத்துக்குள் திறக்கப்பட்டு விடும்"

மேயர் தேர்தலில் இந்திரா காங்கிரசு தோல்வியுற்றதேன் ?

புனா மாநகராட்சி மேயர் தேர்தலில் இந்திரா காங்கிரசு வேட்பாளர் படுதோல்வியடைந்தார்; அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எம். ஆர். மித்தபெல்லி என்பவர் வெற்றியடைந்தார்.

எம்.ஆர். மித்தபெல்லியை எதிர்க்கட்சியினர் ஆதரித்தனர்; அவருக்கு 37 வாக்குகளும்—இந்திரா காங்கிரசு வேட்பாளருக்கு 31 வாக்குகளும் கிடைத்தன.

இந்திரா காங்கிரசுக்கு புனா மாநகராட்சியில் முழுப் பெரும்பான்மை உள்ளது; எனினும், நான்காண்டுக் காலத்தில் இந்திரா காங்கிரசு தற்போது முதன்முறையாகத் தோல்வி அடைந்திருக்கிறது; இங்கு மொத்த உறுப்பினர்கள் 73 பேர்களில் 41 பேர் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்களாவர்; எனினும் அவர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டது.

மேயர் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் புனா மாநகராட்சி இந்திரா காங்கிரசுக் கட்சித் தலைவர் எஸ். ஏ. தேரே என்பவர் தமது பதவியிலிருந்து விலகினார்; இவர் தமது விலகல் பற்றி எவ்வித காரணமும் தெரிவிக்கவில்லை.

இ. காங்கிரசைச் சேர்ந்த வி. என். சவாண் என்பவர், தம்மை மேயர் பதவிக்கு நிறுத்த வேண்டுமென்று முதலில் கோரியிருந்தார்; அவரை நிறுத்தாததைத் தொடர்ந்து அவர் மேலும் சிலருடன் 'கோஷ்டி' சேர்ந்துகொண்டு இ. காங்கிரசு வேட்பாளருக்கு எதிராக எதிர்க் கட்சி வேட்பாளரை வெளிப்படையாக ஆதரித்தார்; இந்திரா காங்கிரசு படுதோல்வியடைந்தது.

கருநாடகத்தில் மாணவர் மோதல்

போலீசு தடையுத்தரவு

ஹூப்ளி, ஜூலை 22—

பெல்காமில் இருதரப்பு மாணவரிடை ஏற்பட்ட மோதல், வன்முறையாக மாறியதைத் தொடர்ந்து, அப்பகுதியில் கூட்டம்—ஊர்வலங்கட்குத் தடை விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டு மருத்துவ முறையில் உயர் கல்வி

தரத்தை உயர்த்துவது பற்றி ஆலோசனை

புதுடில்லி, ஜூலை 21—

மாநில மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை இயக்குநர்களின் இரண்டுநாள் கூட்டத்தை புதுடில்லியில் மத்திய சுகாதார—குடும்பக் கட்டுப்பாடு அமைச்சகத்தின் செயலாளர் கே. கே. தாஸ் துவக்கி வைத்தார்; இந்திய மருத்துவ முறைகளைக் கற்ற மருத்துவர்களைக் கிராம மக்களுக்கு மருத்துவப் பணி செய்ய அனுப்புவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

"இந்திய மருத்துவ முறைகளையும், ஓமியோபதி முறைகளையும் பின்பற்றும் மருத்துவர்கள் தற்போது 3 இலட்சம் பேர் உள்ளனர்; இந்த எண்ணிக்கையில், 50,000 பேர் தாங்களாகவே சொந்தமாக மருத்துவமனைகளை நடத்தி வருகின்றனர்; எஞ்சியுள்ள மருத்துவர்கள் சிறிது காலம் பயிற்சி பெற்றபின், இந்திய மருத்துவ முறைத் திட்டத்தின் கீழ் கிராமங்களில் மருத்துவப் பணிபுரிய முடியும்" என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய மருத்துவ முறையில் மத்திய அரசின் திட்டத்தின் ஆதரவில் செயல்பட்டுவரும் பட்ட மேற்படிப்புப் பயிற்சிமற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்—தனி நிறுவனங்கள் நடத்திவரும் பட்டப் படிப்புக் கல்லூரிகள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவது பற்றியும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

முதலாளிகளின் மனு தள்ளுபடி

பஸ்களை அரசுடைமையாக்கியது செல்லும்

சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

பஸ்களை அரசுடைமையாக்க 1971-ல் தமிழக அரசு இயற்றிய சட்டம் செல்லாது—என அறிவிக்கக்கோரி சில பஸ் முதலாளிகள் செய்துகொண்ட மனுக்களை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும்—நீதிபதி திரு. வி. வி. இராகவனும் தள்ளுபடி செய்தனர்.

"49 பஸ்களுக்கும் அதற்குக் குறைவாகவும் உள்ளவர்கள் 10 பஸ்கள் வைத்துக்கொள்ளலாம்; 50 பஸ்களுக்கு மேல் உள்ளவர்கள் ஒன்றும் வைத்துக்கொள்ளக் கூடாது" என்று இந்தச் சட்டம் கூறுகிறது.

இந்தச் சட்டம் அரசியல் சட்டத்தை மீறுகிறது என்றும், பஸ்களை மேற்கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ள நஷ்ட ஈடு பெயரளவில்தான இருக்கிறது என்றும், 50-க்கு மேலுள்ள பஸ்களை மேற்கொள்வது எப்படிப் பொதுமக்கள் நலனுக்கு உகந்ததாகிறது என்று சொல்லப்படவில்லை என்றும், இது பொதுமக்கள் நலனை முன்னிட்டுச் செய்யப்பட்ட சட்டம் அல்ல என்றும் மனுதாரர்கள் கூறினர்.

"அரசியல் சட்டப்படி இந்தச் சட்டம் செல்லும்; அது சட்டமன்ற அதிகார வரம்புக்கு உட்பட்டதே; சமுதாய நலனை முன்னிட்டுச் செய்யப்பட்ட இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் தடுக்க வேண்டியதில்லை" என்று, அரசுத் தரப்பில் கூறப்பட்டது.

மனுக்களைத் தள்ளுபடி செய்து நீதிபதிகள் தமது தீர்ப்பில் கூறியதாவது :—

"இந்தச் சட்டம் அரசியல் சட்டத்தின் 14-வது விதியை மீறவில்லை; 50 பஸ்களுக்கு மேல் உள்ளவர்களை ஒரு பிரிவாகவும், 49 பஸ்களுக்குக் குறைந்தவற்றை வேறு பிரிவாகவும் பிரித்திருப்பதை நியாயமற்றதெனச் சொல்ல முடியாது.

மனுதாரர்களின் சொத்தையோ அல்லது பிழைப்பையோ பறிக்க வேண்டுமென்று சட்டமன்றம் இப்படி நிர்ணயித்ததாகவும் சொல்ல முடியாது.

நஷ்ட ஈட்டைப் பொறுத்தவரையில், அரசுடைமையாக்கப்படும் பஸ்சுக்கு மார்க்கெட் விலைக்கு மேல் நஷ்ட ஈடு தரப்படுகிறது; மார்க்கெட் விலையை நிர்ணயிப்பதற்கான சாதனமும் வரையறுக்கப்பட்டுள்ளது; அதிக நஷ்ட ஈடு கோரி உயர் நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்துகொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது; சட்டத்திலும் சரி—நஷ்ட ஈடு நிர்ணய சாதனத்திலும் சரி—நஷ்ட ஈடுக் கொள்கைக்குப் போதிய வகை செய்யப்பட்டுள்ளது."

ஆறுதல் பெற்ற 'அபலை'யின் வாழ்த்து

[நெ. அ. பூபதி]

[விவசாயப் போராட்டத்தில் உயிர் இழந்த தன் கணவனை நினைத்தும், நிதியளித்த முதல்வரை வாழ்த்ியும் ஒரு விவசாயியின் மனைவி பாடுவது]

மாட்டோடு மாடாக வியர்வை தன்னை
மண்ணுக்கே எருவாக இட்டு நாளும்
பாடுபட்டு உழைத்தாலும் கூலி மட்டும்
மனம்வந்து உயர்த்திதான் கொடுப்ப தில்லை
கேடுகெட்ட முதலாளி நன்மைக் காக
கழகரசை எதிர்க்கின்ற கிளர்ச்சி தன்னில்
ஈடுபட்டு இன்னுயிரைத் தந்து விட்ட
என்னுயிரே உனைப்பிரிந்து வாடு கின்றேன்

வாடுகின்ற என்நிலைக்கு இரக்கம் கொண்டு
வருந்தாதே எனச்சொல்ல யாரு மில்லை
தேடுகின்றான் நம்குழந்தை 'அம்மா எங்கே ?'
தினந்தோறும் கேட்டென்னை வாட்டு கின்றான்
ஓடுகின்ற கண்ணீரைத் துடைத்துக் கொண்டு
ஒட்டியுள்ள கன்னத்தில் முத்த மிட்டு
தேடுகின்றேன் பதிலென்ன சொல்வ தென்றே
தோள்மீது சாய்த்துவிட்டால் உறங்கிப் போவான்

உறங்கத்தான் போனாலும் உறக்கம் இல்லை
உண்ணத்தான் போனாலும் ஏற்க வில்லை
இறக்கத்தான் நினைத்தாலும் முடிய வில்லை
இருந்தாலும் எனக்கென்று வாழ்வு மில்லை
பிறந்திட்ட மகனைநான் காக்க வேண்டும்
பின்பும்பென்ன தேடுவேன் புரிய வில்லை
இறந்திட்டாய் முதலாளி வாழ்வைக் காக்க
இருக்கின்ற எமைக்காக்க நாதி இல்லை

நாதிஇல்லை என்றேநான் நினைத்தி ருந்தேன்
நானுள்ளேன் எனச்சொல்லி கலைஞர் இன்று
பாதித்தோர் குடும்பத்தைக் காக்க வேண்டி
பரிவோடு ஐயாயிரம் ரூபாய் தந்தார்
பாதியிலே உன்கதைதான் முடியும் என்று
பாவிநான் நினைத்திருந்தால் கடுத்தி ருப்பேன்
மீதிகதை நான்தொடர முடிவு கொண்டு
மனதார வாழ்த்துகின்றேன் முதல்வர் வாழ்க!

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
மணமக்களுக்கு ஒரு மகத்தான பரிசு.
தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்குவீர்.
ரூ. ஒரு லட்சம் பரிசு பெறக்கூடும்
மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 7,00,000 *
முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)
குலுக்கல் நாள்:
31-7-1972
பரிசுச் சீட்டு ஒன்றின்
விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
தமிழ்நாடு அரசு, சென்னை-9
*2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

பொருளாதாரத் துறையில் விரைவான மாறுதல்

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டியதன் அவசியம்

சட்டக் கமிஷன் தலைவர் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 21—

"பொதுமக்கள் கருத்து விழிப்புடன் செயல்பட்டால்தான், நாட்டில் சமூக—பொருளாதார மாறுதல்களைச் சட்டத்தின் மூலம் வேகமாகக் கொண்டுவர முடியும்"

என்று சட்டக் கமிஷன் தலைவர் கஜேந்திர கட்கார் கருத்தறிவித்தார்.

"சட்டத்தின் ஆட்சியும் பங்கும்" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில், அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு :—

"ஒவ்வொரு புதிய சட்டமும் சட்டமன்றங்களிலும்—மேடைகளிலும்—பத்திரிகைகளிலும் நன்கு விவாதிக்கப்பட வேண்டும்; படித்தவர்கள் இம்பிரச்சினையில் அலட்சியப் போக்குடன் இருந்தால், குற்றம் அவர்களுடையதே தவிர சனநாயகத்தினுடையதல்ல; பொதுமக்கள் கருத்து உயிரோட்டம் உள்ளதாக இருக்க வேண்டும்.

பெரும்பான்மை அதிகமாக ஆகக் கருத்து வேறுபாட்டுக்கு அரசு அதிக முக்கியத்துவம் தர வேண்டும்.

இந்தியாவைப் போன்ற சமூக நல அரசு உள்ள ஒரு சனநாயக நாட்டுக்குப் புதிய சட்டத்தின் மைய இடமாக இருப்பது சட்டமன்றமோ அல்லது நீதிமன்றமோ அல்ல—சந்தைக் கடைதான்; சாதாரண மனிதனின் நியாயமான வேட்கைகள்தான் சட்டத்தின்மைய இடமாகும்; அவனுடைய வேட்கைகள் அதிகமாக ஆக சட்டத்தின் வரம்பும் அதிகமாகும்.

ஒரு சட்டம் இயற்றிவிட்டால், அதை அச்சமின்றி—தயவு தாட்சண்யமின்றிச் செயல்படுத்த வேண்டும்.

சட்டத்தின் ஆட்சியில் சட்டத்தின் பங்கு பற்றி வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டால், சனநாயக விரோத முறைகள் தலைதூக்கிவிடும்; அதே நேரத்தில், 'வன்முறை ஏற்படாமலன்றி உண்மையான குறையைக்கூட அரசாங்கம் தீர்த்து வைக்காது' என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட மத்திய—மாநில அரசு இடம் தரலாகாது.

இந்தியாவின் சனநாயகத்துக்கு மிகப் பெரிய அபாயம் அரசியல் அதிகாரமோ அல்லது அதன் துஷ்பிரயோகமோ அல்ல—பொதுமக்கள் விழிப்புணர்ச்சி இல்லாமல் இருப்பது தான்!

தனிப்பட்ட மனிதனின் சுதந்தரத்தையும்—அதே சமயம் நீதியையும் ஒரேசமயத்தில் பாதுகாப்பதுதான் சட்டத்தின் வேலை; சட்டத்தின் பங்கு—உயிரோட்டத்தோடு விரிவடைந்து கொண்டு போவதை வழக்கறிஞர்கள் உணர்ந்தாலன்றி, சட்டத்தின் ஆட்சிக்கும் பொருளே இல்லாமல் போய்விடும்!

இந்தியாவில் சட்டப் படிப்பை அதன் தனிப்பட்ட சூழ்நிலைக்கு ஏற்றபடி மாற்றியமைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது; கீழேயிருந்து மேலே வரை உள்ள நீதிபதிகளின் கண்ணோட்டமும்—நோக்கும் மாற வேண்டும்; அப்போதுதான், சட்டத்தின் ஆட்சிக்கும் பொருள் இருக்க முடியும்.

இப்போது சட்டப் படிப்பை மாற்றியமைப்பது பற்றி சட்டக் கமிஷன் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது; நிர்வாக அதிகாரிகளைப் போன்றே சட்டத் துறையில் உள்ள அதிகாரிகளுக்கும் அரசுகள் பயிற்சி தர வேண்டும்.

இன்றைய இந்தியாவில் சட்டப் படிப்பு இளைஞர்களைக் கவரவில்லை; இது, துரதிருஷ்டவசமானதாகும்."

வன்முறையாளர்களின் கிளர்ச்சியை முறியடித்த முதல்வருக்குப் பாராட்டு

சிதம்பரம் நகராட்சியில் தீர்மானம்

சிதம்பரம், ஜூலை 22—

கடந்த 17—7—72 அன்று நடைபெற்ற சிதம்பரம் நகராட்சிமன்ற அவசரக் கூட்டத்தில் கழக உறுப்பினர் கு. பாலசுப்பிரமணியம் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது :-

தமிழக அரசின் முதலமைச்சர் அவர்கள், 5—7—72-ல் குழாய்க் கிணறு ருபேரர்களும்—பட்டக்காரர்களும், நிலத்திமிங்கலங்களும்—காழ்ப்புணர்ச்சி கொண்ட அரசியல் கட்சிக்காரர்களும் சேர்ந்து செய்த 'விவசாயக் கிளர்ச்சி' என்ற மோசடியை உரிய நடவடிக்கை எடுத்து உடைத்தெறியப்பட்டமைக்கு இம்மன்றம் நல்லெண்ணம் கொண்ட தமிழ் மக்களின் சார்பில் நன்றிகலந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது

அரசியல் மோசடிக்காரர்களை நம்பி பலியான ஏழை விவசாயிகளுக்கு இம்மன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

விவசாயக் கிளர்ச்சி என்ற மோசடியைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்புத் தராமல் இருந்த வியாபாரப் பெருங்குடி மக்களுக்கும்—கிளர்ச்சியில் ஈடுபடாமல் இருந்த அனைவருக்கும்—நகர மக்களுக்கும் இம்மன்றம் நன்றியும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

துறையூரில் வன்முறைக் கண்டன பொதுக்கூட்டம்

15-7-72 இரவு 8 மணி அளவில் திரு கே. என். நல்லமுத்து தலைமையில் பாரதி அரங்கில், வன்முறைக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

வன்முறைகளைக் கண்டித்துத் தோழர்கள் ந. நல்லுசாமி, வி.பெரியண்ணசாமி, எம். எம். சிவசங்கரன், ஆ. துரைராசு எம்.பி, அ. சித்தி, அர. நடராசன், சுப்பையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருச்சி வட்டத்தில் வன்முறைக் கண்டன ஊர்வலம்

15—7—72 அன்று பேட்டவாய்த்தலை தி. மு. கழக அலுவலகத்திலிருந்து திருச்சி வட்டச் செயலாளர் மு. நடராசன்—அவைத் தலைவர் டி. என். வையாளி—சண்முகம்—அர்ச்சுனன்—திருவரங்கம் நகர அவைத் தலைவர் ப. இராமையா ஆகியோர் தலைமையில் புறப்பட்டு, வன்முறை எதிர்ப்பு முழக்கங்களையும், கழக அரசின் சாதனைகளையும் முழங்கியவாறு, திருப்பராய்த்துறை—சீயபுரம்—குழுமணி—பேரூர்—சீராத்தோப்பு வழியாக உறையூரில் நாவலர் அவர்களது கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு வந்து சேர்ந்தது.

20 மைல் தூரம் சுற்றிவந்த இந்த ஊர்வலம், கிராம மக்களிடையே எழுச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியதுடன், நல்லதோர் நிலைமை விளக்கமாகவும் அமைந்தது.

திருவெறும்பூரில் வன்முறைக் கண்டனப் பொதுக்கூட்டம்

15—7—72 அன்று திருவெறும்பூர் சீரணி அரங்கில் திரு செர்பதின் தலைமையில் வன்முறைக் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தொழர்கள் வெற்றிகொண்டான், கு. காமாட்சி எம்.எல்.ஏ., திருச்சி வட்டச் செயலாளர் மு. நடராசன், அவைத் தலைவர் டி. என். வையாளி, ஒன்றியப் பெருந்தலைவர் கூ. ச. முருகேசன், ஏ. எம். ஜோசப், கூ. மு. பெரியசாமி, புலவா முருகேசன், மச்பூல் மற்றும் பலர், 'விவசாயப் போராட்டம்' என்ற பெயரால் பட்டக்காரர் கும்பல் நடத்திய வன்முறை செயல்களைக் கண்டித்தும்—கழக அரசின் சாதனைகளை விளக்கியும், காங்கிரசு—வலது கம்யூனிஸ்டுக் கூட்டணியினர் கழக அரசைக் கவிழ்க்கக் கையாளும் சதித் திட்டங்களை மக்கள் முறியடித்து கழக அரசுக்குத் துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

கட்டிமேடு ஊராட்சி இடைத்தேர்தல்

கழகத் தோழர் வெற்றி

திருத்துறைப்பூண்டி வட்டம்—கட்டிமேடு ஊராட்சி மன்ற 1-வது வார்டு இடைத்தேர்தல் 29—6—72 அன்று நடைபெற்றது; அதுபோது கழக உறுப்பினரும் எம். ஜி. ஆர். மன்ற உறுப்பினருமான எஸ். ஏ. சலாம், சிண்டிகேட் வேட்பாளர் ஏ. கச்சுமொய்தீனை 57 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்து வாகை சூடினார்.

வலது கம்யூனிஸ்டுகள் யாரும் வாக்களிக்க வரவில்லை.

சி. சுப்பிரமணியம் இலாகா பறிமுதல்

புதுடில்லி, ஜூலை 22--

எதிர்பார்க்கப்பட்டதற்கு மாருக மத்திய அமைச்சரவை மாற்றுதல் குறித்த அறிவிப்பு நேற்று வெளியாகவில்லை; ஆயினும் நாளை புதிதாக நியமிக்கப்படவிருக்கும் அமைச்சர்களின் பதவியேற்பு உறுதிமொழிக்கான ஏற்பாடுகள், குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்றுவருகின்றன.

அனுமந்தையாவைப்போலவே, இராஜினாமாச் செய்த மொய்னுல் ஹக் சௌதுரியும், தனக்கு அளிக்கப்பட்ட தூதுவர் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்ததாகத் தெரியவருகிறது; நேற்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மொய்னுல் ஹக் சௌதுரியை அழைத்து, 'தூதுவர் பதவியை ஏற்க முடியாமலிருந்தால் ஆளுநர் பதவியையாவது ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று கேட்டுக்கொண்டதாகத் தெரியவருகிறது; ஆனால் சௌதுரியோ, பதவிப் பொறுப்பு எதிலும் கட்டுப்படாமல் தமது சொந்த மாநிலமான அசாமில் தீவிர அரசியலில் இறங்க முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும் பல துணை அமைச்சர்களின் இலாகாக்களும் மாற்றப்படலாம் என்றும் தெரியவருகிறது; இவர்களில் பலரும் இப்போது தலைநகரில் இல்லை; அமைச்சரவை மாற்ற அறிவிப்பு தாமதப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாம்.

புதிய அமைச்சர்களாக டி. பி. தாரும் -- டி. ஏ. பாயும் நியமிக்கப்படுவதுடன், பெரிய மாறுதல் மற்ருென்று -- சி. சுப்பிரமணியத்திடம் தொழில் வளர்ச்சித் துறை ஒப்படைக்கப்படுவதாகும்; சி. சுப்பிரமணியத்திடம் இருந்த திட்டத் துறை டி. பி. தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடவை அமைச்சரவை மாற்றத்தில் மற்ருெரு குறிப்பிடத்தக்க கிழ்ச்சி என்னவெனில், மூத்த அமைச்சர்களான ஜெ ஜீவன்ராமையும் -- சவாணையும் தனிப்பட்ட முறையில் தலைமையமைச்சர் கலந்தாலோசிக்கவில்லை என்பதாகும்.

அரசியல் விவகாரக் குழுவில் பொதுவாக இது குறித்துக் குறிப்பிட்டதைத் தவிர, தலைமையமைச்சர், அவர்களில் எவரையும் கலந்தாலோசிக்கவில்லையாம்; இக்குழுவின் மற்ற இரு அமைச்சர்களான சுவரண் சிங்கும் -- பக்ருதீன் அலி அகமதும் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதையும் நோக்கர்கள் குறிப்பிடுகிருர்கள்.

இப்போதைய இந்த மாற்றங்கள் தவிர அடுத்த செப்டம்பரில் பெரிய மாறுதல்கள் செய்யத் தலைமையமைச்சர் திட்டமிட்டிருக்கிருராம்; அப்போது மூத்த அமைச்சர்கள் உட்படப் பலரும் பதவி விலகவேண்டியிருக்கும் என்று கருதப்படுகிறது.

தி.மு.க.-லீக் தூதுக் குழு

உ. பி. மாநிலத்துக்குப் புறப்பாடு

சென்னை, ஜூலை 22—

அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற கிளர்ச்சி பற்றியும் -- போலீசுத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும் நேரில் கண்டறிந்து உண்மை நிலை அறிவதற்குத் தி மு கழகத்தின் சார்பிலும் -- முஸ்லிம் லீக் சார்பிலும் நியமிக்கப்பட்ட தூதுக் குழுவினர் சென்னையிலிருந்து உத்தரப் பிரதேசத்திற்குப் பயணமாயினர்.

நாடாளுமன்ற தி மு. க. குழுத் தலைவர் நாஞ்சில் கி. மனோகரன், நாடாளுமன்ற மேலவை தி. மு. க. குழுத் தலைவர் தில்லைவில்லாளன் ஆகியோர் சென்னையிலிருந்து பயணமாயினர்; டில்லியில் இவர்களுடன் முஸ்லிம் லீக் உறுப்பினர் அப்துல் சமத் சேர்ந்துகொள்வார்.

பரங்கிமலைத் தொகுதியில்

புரட்சி நடிகருக்குப் பாராட்டு விழா

23--7--72 ஞாயிறு மாலை 6-மணிக்கு
பல்லாவரம் பிள்ளையார் கோவில் தெருவில்

தலைவர்: பம்மல் நல்லதம்பி

பாராட்டுவோர்:

முதலமைச்சர் கலைஞர்
கல்வியமைச்சர் நாவலர்
சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

நடிகர் என். டி. ராமாராவ்	முனு. ஆதி எம்.எல்.ஏ.
ஆர் எம். வீரப்பன்	திருவாரூர் தங்கராசு
தி. சு இலட்சுமணன் எம்.பி.	ஆர் மோகனரங்கம்
திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.	ஆலந்தூர் எஸ் பாலன்
	சி. இராமலிங்கம்
கே. டி. எஸ் மணி	ச பாலகிருட்டினன்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
அவர்களும் கலந்துகொள்வார்.

—கூட்ட அமைப்பு: பரங்கிமலைத் தொகுதி விழாக் குழு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'கண்ணே -- மணியே' என்றனர்; 'இது எங்கள் வெற்றியல்ல -- கலைஞரின் வெற்றி -- கழகத்தின் வெற்றி' என்றனர்.

உடன்பிறப்பே! இவர்களை உச்சாணிக் கொப்பிலே கொண்டுபோய் வைக்க நான் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிக்காரர்களிடம் எவ்வளவு தாக்குதலைப் பெறவேண்டியிருந்தது என்பதும், நம்மவர்களிடையேகூட நான் எவ்வளவு சமாதானம் சொல்லவேண்டியிருந்தது என்பதும் நாடறிந்த செய்திகளாகும்; பரவாயில்லை -- நன்றிக்குப் பொருள் புரியாதவர்கள் நன்ருக வாழட்டும்!

'நன்றி மறப்பது நன்றன்று' என்று சொன்ன திருவள்ளுவன் செத்துத் தொலையட்டும்!

'ஏனோதானோ' என்று ஏதேதோ சொற்களை உதிர்த்துத் தீர்மானம் எழுதுவதும் -- அவைகளை ஏடுகளில் பிரசுரித்து ஒரு நாள் இன்பம் காண்பதும் அவர்களுக்குப் பொழுதுபோக்கு என்ருல், அந்தத் திருப்தியை அவர்கள் அடைந்துகொள்ளட்டும்!

ஆனல் நீ ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும்; அவர்கள், வழக்கு ஜோடிக்கத் தொடங்கிவிட்டார்கள்; 'அந்த வழக்கில் சத்துமில்லை -- சாரமுமில்லை' என்பதை தமிழ் மக்கள் உணராமல் இல்லை!

இருந்ததை இழந்ததுகளுக்கு எரிச்சல் -- அடிவயிற்றிலிருந்து எரிமலையோல் புகை கக்கிக் கொண்டுதான வரும்! அந்த உணர்ச்சியைத்தான் அவர்கள் ஜோடிக்கும் வழக்கில் என்னல் காண முடிகிறது!

"ஆகா -- தி. மு. க.-வுக்கு எவ்வளவு பெரிய கண்டனம் -- எப்படிப்பட்ட தாக்குதல்" என்று சிலர் சிரித்து மகிழ்வர்! சிலந்தி உள்ளங்களை நீயும் நானுந்தான் என்றும் அறிந்திருக்கிருேமே!

இரண்டொரு திங்களுக்கு முன்புதான் நெல்லையில் நமது கழக நண்பர் சண்முகசுந்தர ராஜாவைக் கொலை வெறிக்குப் பலிகொடுத்தோம்!

சில நாட்களுக்கு முன்புதான் நமது தொழிற்சங்கத் தலைவன் பிரதாபச்சந்திரன் கொலை வெறிக்குக் காவு கொடுத்தோம்!

ஆனல், இந்திரா காங்கிரசு தீர்மானம் ஓதுகிறது -- நாம் கொலைகாரர்கள் என்று!

ஒருவேளை, தாங்கள் செயற்குழு கூட்டியுள்ள இடம் தமிழகம் என்பதை மறந்துவிட்டு -- தங்கள் கட்சி ஆட்சி நடைபெறும் வேறு ஒரு மாநிலத்தைப்பற்றி விமர்சித்து விட்டார்களோ -- என்னவோ!

சில மாதங்களுக்கு முன்பு பெர்னண்டஸ் என்ற சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் என்னைச் சந்தித்தார்; சில நாட்களுக்கு முன்பு மற்ருெரு பெருந்தகையாளரோடு உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது; அவர்கள் தெரிவித்த தகவல்களின்படி, ஒரு மாநிலத்தில் தேர்தல் நேரத்தில் -- ஒரு எதிர்க் கட்சியின் இரண்டாவது வரிசை முன்னணித் தலைவர்கள் எண்பது பேருக்குமேல் படுகொலை செய்யப்பட்டார்களாம்!

இப்படிப்பட்ட இரத்த முத்திரை குத்திக்கொண்டவர்கள் நம்மைப் பார்த்து, 'கொலைகாரர்கள் -- கொள்ளைக்காரர்கள் -- அராஜகவாதிகள்' என்று குற்றஞ் சாட்டுகிருர்கள்!

நம்மை நோக்கி அவர்களின் ஒரு விரல் நீட்டப்படும்போது, அவர்களது மூன்று விரல்கள் அவர்களை நோக்கி நீட்டப்பட்டிருக்கின்றன என்பதை மறந்து விடுகிருர்கள்!

இந்தியா முழுதும் ஒரு குடையின்கீழ் -- இல்லை, இல்லை -- ஒரு கட்சியின் குடையின்கீழ் ஆள வேண்டுமாம்! மற்ற கட்சிகள் மாள வேண்டுமாம்!

தலைமையமைச்சர் இந்திராகாந்தி அம்மையாருக்கு அந்த ஆசை இருக்கிறதோ இல்லையோ -- அதை எப்படியும் உருவாக்கி -- அந்த அம்மையாரை, 'இந்தியாவின் ஏகச் சக்கரவர்த்தினி' ஆக்க வேண்டுமென்ற துடிப்பு அந்தக் கட்சியின் ஆழ்வாராதியர்களுக்கும், நாயன்மார்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது!

அவர்களைப் பார்த்துத் தமிழகம், கேலிப் புன்னகையோடு கேட்கும் கேள்வி இதுதான் -- 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா!'

தமிழக முதல்வரின் கருத்து நியாயமானதே!

தலைமையமைச்சர் இந்திரா காந்தி ஒப்புக்கொள்கிருர்

முதல்வர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு கலைஞருக்குக் கடிதம்

புதுடில்லி, ஜூலை 22—

மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் நிலச் சீர்திருத்தம் பற்றி இந்திரா காங்கிரசுக் கட்சியின் குழு உருவாக்கிய அறிக்கை ஆய்வுக்கு வருவதைக் கண்டித்துத் தமிழக முதல்வர் கலைஞர் தலைமையமைச்சருக்குக் கடிதம் எழுதியது நினைவிருக்கலாம்; அதற்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி பதில் எழுதியுள்ளார்; அதில் அவர், 'தமிழக முதலமைச்சரின் கருத்து நியாயமானதே' என்று ஒப்புக்கொண்டுள்ளார்; 'முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழக முதலமைச்சர் கலந்துகொள்ள வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

தலைமையமைச்சர் எழுதிய கடிதம் வருமாறு:—

அன்புள்ள திரு. கருணாநிதி,

நிலச் சீர்திருத்தம் பற்றிய முதல்வர்களின் மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் குறிப்புகள் குறித்துத் தாங்கள் ஜூலை 19-ந் தேதி எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

நீங்கள் சொல்லுவதிலும் ஓர் நியாயம் இருக்கிறது; மத்திய வேளாண்மை அமைச்சகம் எல்லாத் தன்மைகளையும் உள்ளடக்கி--நிலச் சீர்திருத்தம் பற்றிய அறிக்கையினைத் தயாரித்து--அதனை முதலமைச்சர்களின் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கலாம்.

ஆனல் அத்தகைய அறிக்கையும், வேளாண்மை அமைச்சரும்-வேறு சில மத்திய அமைச்சர்களும் நெருங்கிப் பங்கேற்ற காங்கிரசுக் குழு நிலச்சீர்திருத்தம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களை எதிரொலிப்பதாகவே இருந்திருக்கும்.

இந்தக் கட்டத்தில் நாம் கவனிக்க வேண்டியது, 'ஏற்கனவே அனுப்பப்பட்ட குறிப்புகள் நமது விவாதங்களுக்குப் போதுமான அடிப்படையைக் கொண்டிருக்கிறதா' என்பதேயாகும்.

முதலமைச்சர்கள் மாநாட்டில் தாங்கள், தங்களது அரசினுடையவும்-கட்சியினுடையவுமான கருத்துக்களை எடுத்துக் கூற உரிமை படைத்திருக்கிறீர்கள்.

தாங்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்வது இன்றியமையாததாகும். தாங்கள் மாநாட்டுக்கு வர இயலும் என்று நம்புகிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible]) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

தாயகம் திரும்பினர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.

சென்னை, ஜூலை 22—

'பாரத்' விருது பெற்ற கழகப் பொருளாளர் -- புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், தம்முடைய சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று மாலை 5-30 மணியளவில் விமானமூலம் சென்னை வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் உணவு -- வகுவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களும்; மேயரும், மற்றும் கழகத் தோழர்களும், கலையுலகப் பிரமுகர்களும் திரளாக வந்திருந்து புரட்சி நடிகரை வரவேற்றனர்.

பினங்கு ஆளுநர், 'நடிப்பிற்குரிய சிறப்புப் பட்டம்' வழங்குவதற்காக அந்நாட்டு அரசின் சார்பில் புரட்சி நடிகருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அந்தச் சிறப்புப் பட்டம், அனைத்திந்தியச் சிறந்த நடிகராகப் புரட்சி நடிகர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அண்டை நாட்டினர் அளிக்கும் பட்டமாகும்; இத்தகுசிறப்புப் பட்டம் பெறுவதில் புரட்சி நடிகர்தான் தமிழகத்தில் முதலாவதாகத் திகழ்கிருர்.

இந்தச் சிறப்புப் பட்டத்தைப் பெறுவதற்கும் -- சிங்கப்பூரில நடைபெற்ற கலை விழாவில் கலந்துகொள்வதற்குமாகச் சென்ற வாரத்தில் சென்றிருந்த புரட்சி நடிகர், சிங்கப்பூரிலும்--பினங்கிலும் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திரும்பியுள்ளார்.

அவருடன், சிங்கப்பூர் கலை விழாவில் கலந்துகொள்ளச் சென்றிருந்த தமிழகத்து நடிக -- நடிகையர் சிலரும் வந்தனர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

24--7--72

முத்துப்பேட்டை

மஜீத் மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு பெரிய கடைவீதி அருகில்; தலைவர்: எம். ஜமால் முகம்மது; பேசுவோர்; திருப்பத்தூர் இராமமூர்த்தி, மா. மீனாட்சிசுந்தரம் எம.எல்.ஏ., எம்.ஏ. அகமது அன்வார், செ. யூசுப், கி. கி. இராமானுசம் மற்றும் பலர்.

மணலி ஆலையில் தீ விபத்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

5,000 டன் எண்ணெய் இருந்த டாங்கியில் தீப்பிடித்ததனுல் சுமார் 1,500 டன எண்ணெயாவது எரிந்து போயிருக்க வேண்டும் என்று மதிப்பிடப்படுகிறது; டாங்கிக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறதாம்.

தீயை அணைக்கச் சுமார் 9 மணி நேரம் தீயணைப்புப் படையினர் போராடியிருக்கின்றனர்.